பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28.

"முயற்சி திருவினை யாக்கும்"

தொகுதி 25 | சார்வரி ஹு புரட்டாசி மீ 1960 செப்டம்பர் மீ | பகுதி 6

பொருளடக்கம்

பக்கம்

பத்திராதிபர் குறிப்புகள் ... 107

குதிரை முட்டை ... 108

நாகரீகத்தின் போக்கு ... 109

வீர சங்கமம் ... 111

நவீன அதிசயங்கள் ... 114

கல்வித் தெய்வம் ... 117

செய்தித் திரட்டு ... 118

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி 25 ந.பை.

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

பொங்கல் தமிழ் வாசகம்

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	37 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	50 ,,
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	65 ,,
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	85 ,,

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,

லீலாவதி சுலப கணிதம்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	90 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 00

நவீன சுலப கணிதம்

முதல் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 25

நவீன சமூக வரலாறு

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	45 ந.பை
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	75 ,,

புது முறை சமூக வரலாறு

முதல் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 12
இரண்டாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 90

நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	80 ,,

கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	60 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	60 ,,
மூன்றும் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	60 ,,

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1

பாலர் கல்வி

தொகுதி 25	சார்வரி ஹு புரட்டாசி மீ 1960 செப்டம்பர் மீ	பகுதி .6

பத்திராதிபர் குறிப்புகள்

ஆசிரியரின் பென்ஷன் திட்டம்

சர்க்கார் 18-8-1960 ல் வெளியிட்டிருக்கும் உத்திரவு இப்பத்திரிக்கையின் வேறொரு பக்கத்தில் காணலாம். அதன்படி ரிடையராகி மறுபடியும் ஆசிரியர் வேலையில் எயிடெட் பள்ளியில் அல்லது லோகல் போர்டு பள்ளியில் வேலையிலிருந்தால், வேலையிலிருக்கும் காலத்திற்குப் பென்ஷன் நிறுத்தி வைக்கப்படுமென்று உத்திரவிடப்படுகிறது. இக்குறையை நிவர்த்தித்து, சர்க்கார் ஆசிரியர்களுக்குள்ள சலுகை மற்ற ஆசிரியர்களும் தேவையென கேட்டுவருகிறோம்.

சர்க்கார் ஆசிரியர் ரிடையராகி மறுபடியும் ஆசிரியர் வேலையிலிருந்தால் பென்ஷன் வாங்கலாம். பென்ஷன் தொகையும் புதிய வேலையில் வாங்கும் சம்பளமும் சேர்ந்து ரிடையராகும் காலத்தில் வாங்கிய சம்பளத்திற்கு அதிகமாகக் கூடாதென்ற ஒரே நிபந்தனைதான். இந்த நிபந்தனைக் குட்பட்டுதான் சர்க்கார் பள்ளியில்லாத மற்ற பள்ளிகளிலிருந்து ரிடையராகும் ஆசிரியர்கள் விஷயத்திலும் பென்ஷன் கேட்டு வருகிறோம்.

பெரும்பாலான ஆரம்பபள்ளி ஆசிரியர்கள் வாங்கக்கூடிய பென்ஷன் தொகை ரூபாய் பத்தும், அதற்குட்பட்டும்தான். மறுவேலையில் அமரும்பொழுது வாங்கிய சம்பளத்தில் சுமார் பாதியளவே கிடைக்கிறது. இந்த பென்ஷன் தொகையும் பெற்றால், ஓரளவு வாழ்க்கை நடத்த முடியும். பென்ஷனை உத்தேசித்து, மறு வேலைக்குப் போகவேண்டாமென்றால் பென்ஷன் தொகை மிக மிகக் குறைவு. பென்ஷனையும் மறுவேலைச் சம்பளத்தையும் சேர்த்தாலேயே, வாழ்க்கைக்குப் போதுமானதாயிராது. அந்நிலையில் சர்க்கார் ஆசிரியர் வேறு, மற்ற பள்ளிகளிலுள்ள ஆசிரியர் வேறு என்று கருதாமல் இச்சலுகையை எல்லா ஆசிரியர்களுக்கும் பொருந்தும்படி சர்க்கார் செய்யுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

பிராவிடெண்ட் பண்டு

ஆசிரியர் பிராவிடெண்ட் பண்டு கணக்குகள் முடிவு செய்யப்பட்டுப் பணம் வாங்குவதற்குத் தாமதம் வெகுவாக ஆவதற்குக் காரணங்களில் முக்கியமானது பூர்த்தியான சேவிங்ஸ்கணக்குப் புத்தகங்களைத் தேடியெடுக்கவேண்டியிருப்பதால் தான். சிலவேளைகளில் கிடைக்காத பாஸ் புத்தகங்களுக்கு ஆசிரியர் செலவில் (ledger entries) வாங்க வேண்டி வருகிறது. இதைத் தவிர்க்க 360 வரிகளடங்கிய 60 பக்கப் பாஸ் புத்தகம் உபயோகப்படுத்தப்பட்டால் ஒரே புத்தகம் ஆசிரியர் சர்வீஸ் பூராவுக்கும் வரும். பூர்த்தியான பழைய பாஸ் புத்தகங்களைத் தேடியெடுக்கும் கஷ்டமும், தாமதமும், ஆசிரியருக்கு நஷ்டமும் இரா. சர்க்

கார் இவ்விஷயத்தில் தகுந்த மாறுதல் ஏற்பாடு செய்யலாம்.

புதுப் பென்ஷன் திட்டம்

நம் ராஜ்ய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு 1-6-1960 முதல் புதுப் பென்ஷன் திட்டம் அமுலுக்கு வருகிறது. அதன்படி சலுகைகள் அதிகம். அதன் முக்கிய அம்சங்களாவன:—

ஒரு உத்தியோகஸ்தர் சம்பளத்தில் $\frac{3}{8}$ பாகம் பென்ஷனாகப் பெறுகிறார். இதைத் தவிர (Gratuity) என்று ஒரு மொத்தத் தொகையும் பெறுகிறார். இந்த மொத்த தொகை 5 வருஷங்களுக்குக் குறையாத சர்வீஸ் உள்ளவர்கள் ரிடையரானாலோ, இறந்து போனாலோ கொடுக்கப்படுகிறது. இது 12 மாத சம்பளத்திற்குக் கீழ்படாமலும் 15 மாத சம்பளத்திற்குட்பட்டும் ஒவ்வொரு வருட சராசரி சம்பளத்தின் $\frac{1}{20}$ பாகமாகக் கணக்கிடப்படுகிறது. இதைத் தவிர 20 வருட சர்வீஸான வர்கள் இறந்துபோனால், அவர்கள் குடும்பத்திற்கு பாதி பென்ஷன் கொடுக்கப்படுகிறது. இது 30 ரூபாய்க்குக் குறையாது, 150 ரூபாய்க்கு மேற்படாது. இப்படிப்பட்ட குடும்ப பென்ஷன் 5 வருடத்திற்குக் குறையாமல் 10 வருடத்திற்கு மேற்படாமல் குடும்பத்திற்குக் கிடைக்கும்.

இப்படிப்பட்ட திட்டம் சர்க்கார் ஆசிரியருக்கு உண்டு. மற்ற ஆசிரியர்களுக்கும் இது விஸ்தரிக்கப்படவேண்டிய அவசியம் உண்டு. ஆசிரியர் சிலர் 20 வருட சர்வீஸ் போட்டு இறந்து போவதும் பென்ஷன் வாங்குவதற்கு ஒரு வருடம், இரண்டு வருடங்கள் முன் இறந்து போவதும், பென்ஷன் வாங்கிய உடனேயே ஒரு வருட காலத்தில் இறந்து போவதையும் நாம் கண்டிருக்கிறோம். இக்குடும்பங்களின் நிலையைக் கண்டு பரிதபிக்காமலிருக்கமுடியாது. மேலே சொல்லிய திட்டம் ஆசிரியருக்கு இப்பொழுது இருக்கும் பிராவிடெண்ட் பண்டு திட்டத்தையும், பென்ஷன் திட்டத்தையும் விட அதிக நன்மை பயக்குமாதலால், அத்திட்டங்களுக்குப் பதிலாக இப்புதுப் பென்ஷன் திட்டத்தையே ஆசிரியர்கள் வரவேற்பார்கள்.

குதிரை முட்டை

நல்லைக்கவி அ. இளங்கோவன்.

1. கோமாளிக் குப்பன்
குதிரை வாங்கப் போனான்!
ஏமாளி யாகி
ஏமாந்து வந்தான்!

2. குதிரைக் கொட்டம் ஒன்றில்
குவிய லாகக் கண்டான்
புதிய பெரிய பழங்கள்
பூசணிப் பழங்கள்!

3. குதிரை முட்டை யிவைகள்
என்றெண்ணிக் கொண்டான்!
"குதிரை முட்டை விலையென்ன
கொடுக்க லாமா" என்றான்!

4. "ஐந்து பணம்" என்றான்
அங்கி ருந்த சுப்பன்!
தந்தொரு பழத்தைத்
தானெ டுத்தான் குப்பன்!

5. வயல் வரப்பில் நடந்தான்
வழுக்கி விழுந் திட்டான்!
முயல் எழுந்து பாயவே
மூடக் குப்பன் எண்ணினான்:

6. "முட்டை யுடைந்து போச்சு
முட் டைக்குள் ளிருந்து
குட்டிக் குதிரை போகுது
குதி குதித்துத் தாவுது!"

7. "குட்டி யாக இப்படி!
குதிரை யானல் எப்படி?
கட்டி வைக்க முடியுமோ?
காசு போனல் போகட்டும்!"

GOVERNMENT ORDERS

DEPARTMENT OF EDUCATION AND PUBLIC HEALTH

(Education)

MADRAS TEACHERS' CONTRIBUTORY PROVIDENT FUND INSURANCE PENSION RULES

(*G.O. No.* 1778, *Education,* 18*th August* 1960)

S.R.O. No. A-224 of 1960.

In the Madras Teachers' Contributory Provident Fund Insurance Pension Rules, 1958, in rule 9, for the first proviso, the following shall be substituted, namely :—

"Provided that nothing contained in this rule shall preclude a teacher who has completed the age of 55 years or 60 years as the case may be from being employed after retirement either in the same school or in any other school under the same or a different management in accordance with the rules and orders on the subject. During the period of such employment the teacher shall not be entitled to draw any pension. The management of the school which employs the retired teacher shall intimate the fact of appointment to the District Educational Officer and the Accountant-General so that the pension due to the teacher may be kept in abeyance for the period of re-employment.

Provided also that when a retired teacher is employed under the State Government in any capacity whatsoever, he shall be allowed to draw his pension in full and in addition such pay and allowances as will bring his total emoluments up to the total emoluments drawn by him on the date of retirement. In the case, however, of a teacher re-employed in lower post his emoluments plus pension during the period of re-employment shall be limited to the total emoluments drawn by him at the time of retirement or to the maximum pay of the post in which he is re-employed together with the corresponding allowances whichever is less."

நாகரீகத்தின் போக்கு

(G. Krishnamoorthy, M. L. C.)

நாகரீகத்தின் போக்கைக் கவனித்தால் இந்த விபரீதம் எப்படிச் சரியாகும் என்று கவலை ஏற்படுகிறது.

நாகரீகத்தின் பெயரால் நதிகள் இல்லாத இடங்களில் குடியேறி, நகரங்கள் உண்டாக்கி, பல மைல்களுக்கப்பாலுள்ள தண்ணீரைக் குழாய்களின்மூலம் மெஷின்களைவைத்துக் கொண்டு வந்து கொடுக்க ஏராளச் செலவு செய்கிறோம். கிராமங்களில் தண்ணீரைப் பாதுகாத்து குடிக்கும் தண்ணீராய் ஒதுக்கப்பட்டிருந்ததுபோக, அங்கும் தண்ணீரை சேகரித்துக் குழாய்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட தண்ணீராய் வழங்கும் திட்டங்களுக்குச் செலவு செய்ய ஏற்பாடு செய்கிறோம். ஒரு காவற்காரர் ஒரு குளத்தைப் பாதுகாக்கும் செலவிற்கு பதிலாக பல குழாய்களும், மெஷின்களும், எஞ்சினீயர்களும் வேலை செய்யவேண்டிய திட்டங்களைப் புகுத்துகிறோம். சில பேர்கள் விஸ்தாரமான வீட்டு வசதியுடன் கூடிய கிராமங்களை விட்டுப் பல பேர்கள் சிறிய இடத்தில் ஒருவர் தலையின்மேல் ஒருவர் உட்காருவது போன்ற மாடிகளைக்கட்டி சிறு அறைகளில் அடைந்துகொள்ளும் நகரங்களை விஸ்தரிக்கிறோம்.

வேப்பங்குச்சியை உபயோகப்படுத்தி பல் சுத்தஞ் செய்ததுபோக, வேப்பம் சத்து அடங்கிய பசைகளை ஈயக் காகிதக் குழாய்களில் அடைத்து உபயோகிக்கிறோம். மரம், மட்டை, கட்டைகள் உபயோகித்து வென்னீர் காய்ச்சிய இடத்தில் மரத்தைப் பொசுக்கியெடுத்த கரிக் கட்டையே மேலென்று நினைத்து உபயோகிக்க ஆரம்பித்துவிட்டோம். காய்கறி, பழம் சாதாரண உணவு சத்துக்களை விட்டு விட்டு, இச்சத்துக்களடங்கிய "வைடமின்" மாத்திரைகள் பேரில் நம்பிக்கைகொண்டோம். ஒரு அடுக்கு ஆடையை விட்டுவிட்டு, பல அடுக்கு ஆடைகள் ஒன்றின் மேல் ஒன்றாய்ப் போட்டு வியர்வையை தேகத்தினின்று போகாத நாகரீகத்திலிறங்கிவிட்டோம். எண்ணெய் பசையை உண்டுபண்ணும் தைலங்களை விட்டுவிட்டு, எண்ணெய் பசையை நம் தோலினின்றும் பறக்கடிக்கச் செய்யும் சோப்புகளை உபயோகிக்க ஆரம்பித்து விட்டோம். தேகத்திற்குக் குளிர்ச்சி உண்டுபண்ணக்கூடிய மஞ்சள், கோரைக் கிழங்கு, வாசனைக் கிழங்குகளை முற்றிலும் மறந்து, டாய்லெட் தினுசுகளில் இறங்கிவிட்டோம்.

புத்தகமில்லாமல் உபாத்தியாயர் மூலமாய்க் கற்று வந்ததுபோக, புஸ்தக மூட்டைகளைக் குழந்தைகள் சுமக்கும்படி செய்துவிட்டோம். மூளையே நோட்டு, கவனமே பென்ஸில் என்பதுபோக மூளையில் ஒன்றுமில்லை, நோட் புத்தகங்களில் தான் எல்லாம் அடங்கியிருக்கின்றன என்று சொல்லுமளவில் குழந்தைகளைக் கொண்டுவந்து விட்டோம். ஆசிரியரை சிஷ்யன் தேடிப் போனதுபோக ஆசிரியர் சிஷ்யனைத் தேடிப்போகும் காலம் வந்து விட்டது. ஆசிரியர் உட்கார்ந்து, சிஷ்யன் பயபக்தியுடன் பாடம் கேட்டதுபோக சிஷ்யர்கள் உட்கார்ந்து, ஆசிரியர் நின்று கொண்டு பாடஞ்சொல்லுங்காலம் வந்து விட்டது. ஆசிரியர் "இந்தப் பையன் இந்த வகுப்புப் பாடத்தில் தேர்ச்சியடைந்தான்" என்று சொல்லுங்காலம் போய் முன்பின் பார்க்காத ஒருவர் பேப்பரைத் திருத்தி '**பாஸ், பாஸ் ஆகவில்லை**' என்று சொல்லுங்காலம்வந்துவிட்டது. கணக்குடன்கூடிய நம் தேச பாண்டி, சோழி முதலிய விளையாட்டுகள் போய் செலவுமிக்க நாகரீக விளையாட்டுகளான பூப்பந்துகளும், **காரம்போர்டு** விளையாட்டுகளும் வந்து விட்டன.

கோவிலுக்குப் போகும் காலம் மாறி **கிளப்புக்குப்** போகும் காலம் வந்து விட்டது. குளங்கள் வெட்டி, அம்மண்ணைக் கொண்டு, கோவில் சுவர்கள் கட்டியது போக, இடிந்த கோவில் சுவர்களின் கல் மண்ணைக்கொண்டு, குளங்களை நிரப்பிப் பூங்காவாகச் செய்யும் காலம் வந்துவிட்டது.

காப்பு, கொலுசுபோட்டு இளங் குழந்தைகளின் கால்களை உறுதிபடுத்தியது

போக ஸ்டாக்கிங்ஸ் பூட்ஸ் போட்டு கால் களை வளராமல் செய்யும் காலம் வந்து விட்டது. தாய் பெண் குழந்தைகளுக்குச் சமையல் சொல்லிக்கொடுத்ததுபோக பள்ளியில் ஆசிரியை அச்சமையலைச் சொல்லிக்கொடுக்கும் காலம் வந்துவிட் டது. வீட்டில் அழகாக 'பூமியே பேப்பர், கோலமாவே பென்சில், வலது கால் கட்டை விரலே ரப்பர் என்பதுபோல் கோலம் போட்ட பெண் குழந்தைகள் பள்ளியில் நோட்டுக்கில் சுற்றுத காம்பசும் கருப்பாக அழிக்கும் ரப்பரையும் வைத்துக்கொண்டு Geometry க்ஷேத்ர கணித வட்டங்களும் ஸ்கேலை வைத்துக் கோடுகளும் போட வேண்டிய கஷ்டங்களுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறுர்கள். எந்தக் காய்கறி உஷ்ணம், வாயு என்று தெரிந்த காலம் போய், ஒன்றும் புரியாத வைடமின் பெயரால் ஏ, பி, ஸி, டி வைடமின் எந்தக் காய்கறியில் எவ்வளவு இருக்கிற தென்கிற ஆராய்ச்சியில் இறங்கி விட் டோம். 'தேஹி என்றுல் நாஸ்தி' என்று சொல்லக்கூடாதென்ற இந்த நாட்டிலே பேசத்தெரியும் வயதுகூட வராத குழந்தைகள் பிச்சைக்காரர்களை விரட்டும் சக்தி வாய்ந்தனவாகவும் 'இல்லை' என்று சொல்லவும் அமைந்து விட்டன. புத்தர், அசோகர், காந்திஜீ வாழ்ந்த நாட்டில் பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் ஏராளமாகிவிட்டன. அத் துடன் பூச்சிகளைக் கொன்றுல்தான் பயிர் கள் தழைக்குமென பயிர்களில் பூச்சி மருந்துகளை ஏராளமாக உபயோகப் படுத்தி, நம் சுகாதாரத்தைக் கெடுத்துக் கொள்ளும் காலம் வந்துவிட்டது. பசுந் தாள், சாணி உரம் போட்ட நிலங்களில் செயற்கை உர உப்பு இல்லாத சாகுபடி முடியாதெனத் தோன்றிவிட்டது. மண் பாண்டங்கள் போய் "எவர்ஸில்வர்" வந்துவிட்டது.

திண்ணைவைத்துக் கட்டிய வீடுகள் போய் ஒரு அடித் திண்ணையையும் கம்பி போட்டு பிறர் உட்கார்ந்து இளைப்பாற இடமில்லாமல் செய்யுங்காலம் வந்து விட்டது. விருந்தாளியை உபசரித்தது போக விருந்தாளிக்கும் ஹோட்டலி லிருந்து வரவழைத்துத் தருங்காலம் வந்துவிட்டது. பழைய துணிகளை ஏழை களுக்குக் கொடுத்ததுபோக "எவர்ஸில் வர்" வாங்க உபயோகிக்குங்காலம் வந்து விட்டது. இருமுறை மூன்று முறை களுக்குமேல் சாப்பிடாத நாட்டில், எந்த இடத்திலும் எந்த வேளையிலும் சாப்பிடும் வழக்கம் வந்து விட்டது.

இவ்வளவும் இன்னமும் வளராமல், பழைய முறைகளுக்குத் திரும்பப் பார்த் தால், தேசப்பிதா விரும்பிய 'ராம ராஜ்யம்' புலப்பட ஆரம்பிக்கும். இதைச் செய்யக் கூடியவர்கள் ஆசிரியர்களே! அதிலும் ஆரம்ப ஆசிரியர்களே!

நாகரீகம் பழைய முறைக்கு வருவது கஷ்டமெனத்தோன்றலாம். ஆனுல் வருங் கால சமூகம் ஆசிரியர் கைகளில் இருக் கிறது. நாகரீகம் மாறினுலொழிய, பொரு ளாதாரம் அபிவிருத்தி ஆகாது. ஆவன பாட திட்டத்திலே புகுத்தலாம். சர்க்கார் இதைச் செய்வார்களாக.

இவைகளெல்லாம் பழைய கால கருத் துக்கள் என்று உதறித்தள்ளுவது எளிது. மேற்கண்ட ஒவ்வொரு விஷயத்தையும் எடுத்து பழைய முறையின் நன்மையை யும், புதிய முறையின் செலவையும், நன்மையின்மையையும் விளக்கினுல், வருங்கால சமூகம் மாறுமா, மாறுதா என்பதுதான் கேள்வி. தற்கால சமூகத் திற்கு மாறுவது கஷ்டமாயிருக்கலாம். வருங்கால சமூகத்திற்கு மாறுதல் கஷ்ட மில்லை. பழைய முறைகளுக்கு வந்தா லொழிய, அனுவசியத் தேவைகள் குறையா. அனுவசியத் தேவைகளி னுலேயே நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. வாழ்க்கை முறை மாறவேண்டும். எளிய வாழ்க்கை அவ சியம். உயரிய கருத்துக்கள் அவசியம். கானல் நீர் போன்ற நவநாகரீகம் அர்த்த மற்றதென்பது விளக்கவேண்டியது அவ சியம். இது ஆசிரியர்களால்தான் செய்ய முடியும். எவ்வளவு நவநாகரீகத்தில் சுற்றினுலும், கடைசியில் பழைய முறை களுக்கு ஒரு நாள் வந்தாகவேண்டும். அந்த நாள் ஏன் இப்பொழுதே ஆரம்பிக் கக்கூடாது? ஆரம்பித்தால், பத்து வரு டங்களில் சமூக வாழ்க்கை மாறும். ஆடம்பரம் குறையும். செலவு குறையும். இதுவே ஐந்தாண்டு திட்டங்களின் அடிப் படையாக இருக்கவேண்டும்.

பழைய முறைகளின் முக்கியத்தை எடுத்துச் சொல்லும் திட்டமே பாலருக் குக் கல்வியின் முக்கிய அம்சமாயிருந் தால், நாட்டின் மதிப்பு உயரும், சுய தேவைப் பூர்த்தி உண்டாகும், நாடு செழிக்கும், நன்மை உண்டாகும்.

தேசப்பிதா காந்திஜியின் அடியிற் கண்ட விருப்பத்தை நிறைவேற்றியவர் களாவோம்.

தனக்கே உரித்தான பண்பின் அடிப்படையில் படிப்படியாக முன் னேற்றப் பாதையில் நடைபோடும் ஒரு நவ இந்தியாவைத்தான் என் கண்முன்னே நான் காண ஆசைப் படுகிறேன். அழிந்து வரும் மேற்கத் திய நாகரீகத்தின் மூன்றாந்தர பிரதி பலிப்பாக மட்டுமல்ல, முதல்தர பிரதி பலிப்பாகக்கூட இந்த நாடு இருக்கக் கூடாது என்றுதான் நான் விரும்பு கிறேன்.

நாடகம்.

வீர சங்கமம்

V. R. SUBRAMANIAN,

(Headmaster, A. C. C. Factory Ele. School, Madukkarai)

பள்ளி விழாக்களுக்கேற்ற பண்புமிக்க சரித்திர நாடகம்

பாத்திரங்கள்

1.	அலெக்ஸாந்தர்	: :	கிரேக்க நாட்டு மன்னன்
2.	புருஷோத்தமன்	: :	பஞ்சாப் நாட்டுப் பேரரசன்
3.	ஸெல்யூகஸ்	: :	கிரேக்க சேனாதிபதி
4.	மெகஸ்தனிஸ்	: :	கிரேக்க சரித்திர ஆசிரியன்
5.	சமர்	: :	புருஷோத்தமன் மகன்
6.	அம்பி	: :	தக்ஷ சீலே அரசன்
7.	நீர்க்கோ	: :	கிரேக்க சேனைத் தலைவருள் ஒருவன்
8.	கிரேக்க வீரர்கள்	: :	போரில் வெற்றி கண்ட சிலர்

காட்சி—1

326 கி. மு. ஜீலம் நதி "ஹைடாஸ் பெஸ்" (கிரேக்க பெயர்) சண்டைக்குப் பிறகு கிரேக்க சேனாதிபதிகள், கிரேக்க வீரர்கள், (சமர் மாறு வேடத்தில்) உல் லாசமாக சம்பாஷித்தல்.

நீர்க்கோ :—ஸெல்யூகஸ்! நாமும் மகா அலெக்ஸாந்தர் தலைமையில் எத்தனையோ போர்களைக் கண்டுள்ளோம். எத்த னையோ நாடுகளை வென்றுள்ளோம். பார சீகப் படைகளைப் பஞ்சாய்ப் பறக்கடித் தோம். எகிப்தியரை எமலோகத்திற்கு அனுப்பினோம். சிரியாவை சிறிது நேரத் தில் வென்றோம். ஆப்கானிஸ்தானத்தை அரை நொடியில் தீர்த்துக் கட்டினோம். அம்பியோ நம் படைகளுக்கு அஞ்சி அடைக்கலம் புகுந்தான். ஆனால் இந்த ஜீலம் நதிச் சண்டையைப்போல் நமது ஜீவியத்தில் கண்டதில்லை.

ஸெல்யூகஸ் :—உண்மை, முற்றிலும் உண்மை, புருஷோத்தமன் உண்மையி லேயே புருஷரில் உத்தமன்தான். அவ னது நெடிய உருவமும், பயங்கர தோற்ற மும், புஜபல பராக்கிரமும் மிகப் பெரிய ரத, கஜ, துரக, பதாதி சேனைகளும் நம்மை நடுங்கச் செய்து விட்டதல்லவா? அவன் நம்மிடம் கைது ஆனது ஆச்சரி யந்தான். ஆனால் அவன் மகன் 'சமர்' எப்படியோ சாமர்த்தியமாக தப்பிவிட் டானே!

புருஷோத்தமன் அருங் குணத்தால் அல்லவா அலெக்ஸாந்தர் தப்பினார். யானை மீதிருந்த 'புரு'வுக்கு 'பியூஸி பாலஸ்' குதிரையைக் கொல்வதற்குப் பதி லாக நம் அரசரையே கொன்றிருக்கலா மல்லவா! அரசனைக் கொல்வது அழகல்ல என்றுதானே விட்டுவிட்டார்.

நீர்க்கோ :—ஆமாம். இந்நாட்டு அர சர்கள் தர்ம யுத்தம்தான் செய்பவர்கள் என்பதை சரித்திரவாயிலாக கேட்டுள் ளோம். இப்போது நேரிலேயே அதைக் கண்டோம்.

ஸெல்யூகஸ் :—ஜூபிடரின் அருளால் மழை பெய்து 'புரு'வின் தேர்ப்படை

சேற்றில் புதையவும் நமது திடீர் தாக்குதலால் வெகுண்ட யானைப்படைக்குள் குழப்பம் ஏற்பட்டதாலும் அல்லவா நாம் வெற்றி பெற்றோம். அவன் பெரும் படைக்கு முன்னால் நம் படை எம்மாத்திரம். ஜூபிடரின் அருளே அருள், ஜூபிடருக்கு ஜே.

(எல்லோரும் சேர்ந்து ஜே)

காட்சி—2

(அலெக்ஸாந்தர், மெகஸ்தனிஸ் அம்பி வருகை-வீரர்கள்-அலெக்ஸாந்தருக்கு ஜே! எல்லோரும் நின்று மரியாதை செய்தல்-அலெக்ஸாந்தர் எல்லோரையும் சுற்றிப் பார்த்து, சமரை உற்று நோக்கி சந்தேகித்தல்)

அலெக்ஸாந்தர் :—சேனைத் தலைவர்களே! கிரேக்க நாட்டு வீரர்களே! இன்று போரில் வெற்றியடையச் செய்த கடவுளுக்கும் வீர மரணமடைந்த வீரர்களுக்கும் என் வணக்கம். உங்களுக்கு எனது நன்றி. (இரண்டு வீரர்கள் 'புரு'வை கை விலங்குடன் அழைத்து வருதல்) ஹா! ஹா! ஹா! புருஷோத்தமா, எங்கே உன் வீரம்! ஒழிந்ததா உன் கர்வம்? என்னை அற்பமாய் எண்ணிவிட்டாயா? எத்தனையோ மன்னாதி மன்னரை முடி வணங்கச் செய்திருக்கிறேன் தெரியுமா?

புரு :—வீரப்போர் புரிந்து, புண்பட்டு உன்னிடம் அகப்பட்ட உன்போன்ற அரசனை விலங்கிட்டு அழைத்து வருவது உன் நாட்டு வீரமா? அல்லது ராஜரீகமா?

அலெக் :—ஸெல்யூகஸ், நீ என்ன காரியம் செய்தாய்?

ஸெல்யூக்ஸ் :—மகாராஜா, மன்னிக்கவும். நான் செய்த தவறுக்கு வருந்துகிறேன் (உடனே விலங்கை கழற்றுகிறான். சமர் புன்சிரிப்பு செய்தல்.)

அலெக் :—தங்களை ஒரே நாள் போரில் தோல்வி யடையச் செய்ததைப் பார்த்தீர்களா?

புரு :—ஆஹா! என்ன சாமர்த்தியம்! இதுவும் ஒரு போரா? நீர் அடைந்ததும் ஒரு வெற்றியா? எங்கள் துரதிருஷ்டத்தால் மழை பெய்ய எங்கள் சேனையில் முப்பதாயிரம் வில்லாளரும் வீணே நிற்க வேண்டியதாயிற்று. மேலும் ரதங்கள் சேற்றில் புதைந்து செயலற்றுப் போயின. யானைகளோ திடீர் தாக்குதலால் வெகுண்டு எங்களுக்கே சேதம் விளைவித்தன. நீரோ தர்ம யுத்தம் புரியாமல் தந்திரத்தைக் கையாண்டீர். இரவில் உமது திடீர் தாக்குதலும் தீரமற்ற செயல்களும்தான் நான் இந்நிலையில் நிற்கக் காரணம். நான் இதை தோல்வி என்றே கருதவில்லை. உமது அதிருஷ்டம் என்று தான் கருதுகிறேன்.

அலெக் :—யுத்தமென்பதே ஒரு தீயச் செயல். அதில் வஞ்சனை என்பது ஏது? எதைச் செய்தாலும் நியாயந்தான்.

புரு:—அப்படியானால் நீர் போரில் என் யானைக்குச் சமீபமாகச் சென்றபோது உமது குதிரையை ஈட்டியால் குத்தியதற்குப் பதிலாக உம்மையே கொன்றிருந்தால் அதுவும் நியாயந்தானா? அரசனைக் கொல்வது அநியாயமென்று தானே விட்டேன்.

அலெக் :—என்னைக்கொல்லாமல் விட்டது உமது நியாயத்தாலுமல்ல, கருணையாலுமல்ல. வெற்றி உமக்கே என்ற குருட்டு நம்பிக்கையால்தான். அதற்கு இப்போது வருந்துகிறீரா?

புரு :—(கண்கள் சிவக்க, உதட்டைக் கடித்து) இது போன்ற சம்பவம் எத்தனை முறை நேர்ந்தாலும் நான் முறைப்படித் தான் நடந்து கொள்வேன். அதற்காக நான் வருந்துவதுமில்லை. இனி வருந்தப் போவதுமில்லை. ஓர் அற்ப வெற்றிக்கு இவ்வளவு சந்தோஷமா?

அலெக் :—புருஷோத்தமா! நானும் இதுவரை எத்தனையோ அரசர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உன்னைப் போன்ற மனோதிடமும், வீரமும்,பொருந்திய அரசனைப் பார்த்ததே இல்லை. உம்மை உண்மையிலேயே நான் புகழ்கிறேன். உம் பேச்சைக்கேட்கப் பெருமைப்படுகிறேன். தங்களை நான் இனி எப்படி நடத்தவேண்டும் என்று தெரிவித்தால் அப்படியே செய்ய நான் தயார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

புரு :—ஒரு மகாராஜா மற்றொரு மகாராஜாவை எப்படி நடத்துவானோ அதே முறையில் என்னை தாங்கள் நடத்த வேண்டும்.

அலெக் :—சரி, இன்னும் ஏதாவது சொல்லவேண்டுமா?

புரு :—அலெக்ஸாந்தர் ! நீர் பல அரசர்களை வென்றதாகவும் பல போர்களை நிகழ்த்தியதாயும் பெருமைபாராட்டுகிறீர். ஆனால் எங்கள் நாட்டு மன்னரோ பிற நாடுகளை வலுச் சண்டைக்கு இழுத்து ஏராளமான நஷ்டத்தையும், உயிர் சேதத்தையும், துன்பத்தையும் விளைவிப்பதை ஒரு பெருமையாகக் கருதுவதில்லை. எம் நாட்டு மன்னர் தங்கள் தற்காப்பிற்காகவும், உரிமைகளைப் பாதுகாக்கவும் தான் போர் புரிவர். உம்முடைய யுத்த வெறியாலும், நாடாளும் கொள்கையாலும் மனித சமூகத்திற்கு எவ்வளவு கொடுமைகளை, இவ்வளவு சிறு வயதிலேயே செய்திருக்கிறீர்கள் என்பதை நீர் சிறிதாயினும் சிந்தித்ததுண்டா ? நீர் உலக முழுமையும் வென்றாலும் உயிர் போகும்போது எதைக்கொண்டு போகக் கூடும் ? யுத்தத்தால் வரும் பெருமையைக் காட்டிலும் சமாதானம், சகோதரத்துவம், சமத்துவம், சமரசம், சக வாழ்வு ஆகிய பஞ்சசீலக் கொள்கைகளால் வாழ்வதே இம்மையிலும் மறுமையிலும் இன்பமளிக்க வல்லது. அழியாப் புகழை நிலை நிறுத்தக்கூடியது என்பதை நீரும் அறிந்து உம் நாட்டவரும் நன்கு அறிய வேண்டுமென்பதே என் அவா. இது ஒன்றே மனித குலத்தை என்றும் காக்க வல்லது என்பதை இவ்வுலகிற்கு தாங்களே தங்கள் மனமாற்றத்தால் எடுத்துக் காட்டவேண்டும். இதுவே எனது வேண்டுகோள்.

அலெக் :—மெகஸ்தனிஸ், மகாராஜா புருஷோத்தமன் வாக்கியங்களை பொன் ஏட்டில் பொறிக்கவேண்டும். ஞாபகத்தில் வைத்துக்கொண்டு . சரித்திரத்தில் சேர்த்து எழுதுங்கள். இன்று முதல் என் கொள்கைகளை மாற்றிக்கொண்டு யுத்த வெறியை ஒழிக்கிறேன். இனி நம் நாடு திரும்பி நம் நாட்டினவர்க்கு யுத்தத்தில் தோற்றும் தன் தைரியத்தையும் நேர்மையையும் இழக்காத புருஷோத்தமனும் மரணத்திற்கு அஞ்சாத அவன் மகனும் இந்தியாவில் இருக்கிறார்கள் என்பதை நம் தேச மக்களுக்கு உரைப்போம்.

புரு :—ஹா ! என்ன சொன்னீர் ! என் மகன் சமர் உயிருடன் இருக்கிறானா ?

அலெக்:—ராஜ்குமார் சமர், இப்படி வா. (அலெக், சமர் ஆலிங்கனம்செய்தல்.) புருராஜ், உன் மகன் என்னைப் பழிவாங்கவே கிரேக்க உடை தரித்து இங்கு வந்தான். நான் சபையில் நுழைந்தவுடன் அவனைப் பார்த்து சந்தேகம் கொண்டேன். பின் அவன் செய்கைகளால் சந்தேகம் தெளிந்தேன். உமது விருப்பப்படியே உம்மை ஓர் அரசனாகவே பாவிக்கிறேன். நீர் இழந்த நாட்டைமட்டுமின்றி அதோடு இன்னும் நான் ஜெயித்த ஆறு நாடுகளையும் உமக்கே தந்து விட்டேன். பெருமையுடன் உமது பேரரசை பண்புடன் நடத்தி மகிழும். இதற்குப் பதிலாக நான் வேண்டுவது உமது நட்பே.

சமர் :—மஹா அலெக்ஸாந்தர் வாழ்க !

எல்லோரும் சேர்ந்து வாழ்க என்று கோஷித்தல்.

இரு அரசர்களும் தழுவுதல்.

ஸெல்யூகஸ்:—புருஷோத்தமருக்கு ஜே !

எல்லோரும் சேர்ந்து ஜே! என்று கோஷித்தல்.

‘THE SOUTH INDIAN TEACHER’

மாதாந்திரப் பத்திரிகை

வாசித்தீர்களா ?

திரு. G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C.,

எழுதுகிறார்

நவீன அதிசயங்கள்

சாம்பலிலிருந்து கட்டிடங்கள்

ஹாம்பர்க் நகரத்தின் 20 லட்சம் மக்களுக்கு மின்சார சக்தி சப்ளை செய்யும் ஹாம்பர்க் மின்சாரக் கம்பெனிக்குப் பல ஆண்டுகளாக ஒரு பிரச்னை இருந்து வந்தது. மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களில் புகைப் போக்கிகளில் வடிகட்டி எடுக்கப்படும் ஏராளமான சாம்பலையும் கரித்தூளையும் என்ன செய்வதென்று தெரியவில்லை. சரளைக்கல் வெட்டியெடுத்த பள்ளங்களில் அவற்றைக் கொண்டுபோய்க் கொட்டிக்கொண்டிருந்தார்கள். நாளடைவில் இந்தப் பள்ளங்களெல்லாம் நிரம்பி விட்டன. இனி என்ன செய்வதென்று கம்பெனிக்காரர்கள் திகைத்தார்கள். கம்பெனியின் எஞ்சினீயர்கள் நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு இதற்கு அருமையான ஒரு வழி கண்டு பிடித்தார்கள். இந்தச் சாம்பலையும் கரித்தூளையும் பயன்படுத்திக் கட்டிடங்கள் கட்டுவதற்கு உபயோகமாகும் 'போரஸ் கான்க்ரீட்' என்ற ஒருவகை கான்க்ரீட்டைத் தயாரிப்பதற்கு அவர்கள் ஒரு முறையை உருவாக்கினுர்கள்.

இப்போது நகருக்கருகே ஒரு புதிய தொழிற்சாலை தோன்றிவிட்டது. விந்தையான இந்தப் பொருளிலிருந்து கட்டிடங்கள் கட்டுவதற்கு வேண்டிய பாளங்களை இந்தத் தொழிற்சாலை தயாரிக்கிறது. உலகெங்குமிருந்து இவற்றுக்கு 'ஆர்டர்'கள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. ஹாம்பர்க்கின் மின்சார உற்பத்தி நிலையங்களின் கழிவுப் பொருள்களிலிருந்து இந்தத் தொழிற்சாலையில் ஒரு நாளில் தயாராகும் பாளங்களைக்கொண்டு, ஒவ்வொன்றிலும் ஒரு குடும்பம் வசிக்கக் கூடிய பத்து வீடுகள் கட்டலாம். ஆப்ரிக்காவிலிருந்து கீழ்க்கோடிவரை, உலகின் பல நாடுகளுக்கு இந்த போரஸ் கான்க்ரீட் ஏற்றுமதியாகிவருகிறது.

தானே சமைத்துவைக்கும் சாதனம்

ஜெர்மனியில் ஒரு புதிய ஸ்டவ் அடுப்பு கண்டு பிடித்திருக்கிருர்கள். வாயுவினுல் எரியும் இந்த அடுப்பு வேண்டியபோது தானுகவே எரிந்து, தானுகவே அணைந்து கொள்ளும். இதில் இரண்டு தட்டுகளும் வறுக்கும் கம்பிச்சட்டம் ஒன்றும், ரொட்டி சுடும் அறை ஒன்றும் இருக்கின்றன. நவீன எலெக்ட்ரானிக் சாதனங்கள் கொண்ட சுய கட்டுப்பாடு அமைப்புகள் இதில் பொருத்தப் பட்டுள்ளன. சமையலுக்கு வேண்டிய பொருள்களை ஒரு பாத்திரத்தில் போட்டு இதில் உள்ள தட்டுகளின்மேல் வைத்துவிடவேண்டும். கெடிகாரத்துக்கு அலாரம் கொடுப்பது போல இதில் ஒரு முள்ளைத் திருப்பி வைத்து விட்டால் குறிப்பிட்ட நேரத்தில் இது வேலை செய்ய ஆரம்பித்துவிடும்.

ட்ரைவர் இல்லாத ரயில் வண்டிகள்

மேற்கு ஜெர்மனியின் மிகப் பெரிய நகரமும் துறைமுகமும் ஆகிய ஹாம்பர்க்கில் ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான மக்களின் போக்குவரத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை ஹாம்பர்க் போக்கு வரத்து ஸ்தாபனம் திறமையுடன் நடத்திவருகிறது. சிறிய, பெரிய பஸ்களும், புறநகர் ரெயில்வேக்களும் இந்தப் பணியை நிறைவேற்றுவதில் உபயோகிக்கப்படுகின்றன. இருபது லட்சம் மக்கள் வசிக்கும் இந்தப் பெரும் நகரத்தின் போக்குவரத்து சாதனங்களில் மற்றுமொரு புதுமை அம்சத்தைச் சேர்ப்பதற்கு ஹாம்பர்க் போக்குவரத்து ஸ்தாபனம் திட்டமிட்டிருக்கிறது. ட்ரைவர்கள் இல்லாமல் தொலைக் கட்டுப்பாடு மூலம் தாமாகவே இயங்கும் ரயில்வண்டிகள் விடுவதற்கு இந்த ஸ்தாபனம் ஏற்பாடு செய்து வருகிறது.

தொலைக் கட்டுப்பாடு முறையில் இயங்கும் விளையாட்டு ரயில் வண்டிகளை ஜெர்மன் உற்பத்தியாளர்கள் எத்தனையோ ஆண்டுகளாகத் தயாரித்து வந்திருக்கிருர்கள். இப்போது இந்த முறையை உண்மையான ரயில்வண்டிகளில் பயன்படுத்திப் பார்க்கப் போகிருர்கள். பரிசோதனை ரீதியில் விடுவதற்கான ரயில் வண்டிகள் இப்போது தயாராகிக்கொண்டிருக்கின்றன. ஹாம்பர்கின் பாதாள ரயில்பாதைகளில் 75 சதவீதம்வரை தானியங்கி கட்டுப்பாட்டு முறைகள் உப

யோகத்தில் இருந்து வருகின்றன. இப்போது நகரம் முழுவதிலும், ட்ரைவர் இல்லாத ரயில் வண்டிகள் விட்டுப் பரிசோதனை நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். எல்லா ரயில் வண்டிகளும் ஒரேயொரு மத்திய கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து இயக்கப்படும்.

மேற்கு ஜெர்மன் பெடரல் ரெயில்வேக்களில் இந்தத் தானியங்கிமுறையை ஏற்கெனவே உபயோகித்து வருகிறார்கள். சமீபத்தில் இந்த ரயில் வண்டிகளில் உபயோகத்துக்குக் கொண்டு வரப்பட்டு, நல்ல திறமையுடன் செயல் பட்டுவரும் அவசரகால 'பிரேக்கு'களை உதாரணமாகக் குறிப்பிடலாம். வண்டியை நிறுத்துவதற்கு சமிக்ஞை காட்டப்படும்போது, ட்ரைவர் நிறுத்தாமற்போனால், இந்தத் தானியங்கி 'பிரேக்' வண்டியை நிறுத்திவிடும். ஆயினும் இன்னமும் ஹாம்பர்க் போக்குவரத்து ஸ்தாபனத்தில் ஆயிரம் ரயில் வண்டி ட்ரைவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். தானியங்கி முறைகளினால் தங்களுக்கு வேலை இல்லாது போய்விடுமோ என்ற அச்சம் இவர்களுக்கு இன்னும் கொஞ்ச காலத்துக்கு வேண்டியதில்லை. தவிறவும், எவ்வளவுதான் நவீன முறைகள் வந்தாலும், எந்தப் போக்குவரத்து முறையும் இயக்கும் ஆட்களே இல்லாமல் நடக்க முடியாது. எலெக்ட்ரானிக் சாதனங்களையும் இயக்குதல், கட்டுப்பாடு செய்தல், மேற்பார்வையிடுதல் ஆகியவற்றுக்கு ஆட்கள் வேண்டும். தவிரவும், "போ", "நில்" என்ற அடையாளங்களுக்குத் தகுந்தபடி இயங்குவது ஒரு விஷயம்; முற்றிலும் எதிர்பாராத நிலைமைகள் தோன்றும்போது, உதாரணமாக, ரயில்ப் பாதையின் குறுக்கே பசுக்கள் ஆனந்தமாக நடந்து செல்லும்போது, அதற்குத் தகுந்தபடி செயலாற்றுவது வேறு விஷயம். இந்த இரண்டையும் ஒன்றுபோலக் கருதிவிட முடியாது.

செயற்கையான ரத்தக்குழாய்களுடன் உயிர் வாழ்தல்

நடக்க முடியாது என்று இதுவரை கருதப்பட்டுவந்த ஒன்று இப்போது நடந்து விட்டது. உடைந்து போகும் நிலையை அடைந்து விட்ட பழைய ரத்த நாளங்களுக்கு பதிலாக புதிய ரத்த நாளங்களை உடம்பு உருவாக்கிக்கொள்ளுகிறது—வைத்தியர் உதவி செய்தால் மார்பர்க்கைச் சேர்ந்த பேராசிரியர்கள் பாலியும், ட்ஸெங்கரும் நுண்ணிய துளைகள் கொண்ட ப்ளாஸ்டிக் குழாய் ஒன்றின் உதவியுடன், இன்றுங்கூட வைத்தியத் துறையில் அற்புதங்கள் நிகழ்த்த முடியும் என்று நிருபித்திருக்கிறார்கள். இப்போதைக்கு பரிசோதனை முறையில் தான் இவர்கள் இதைச் செய்திருக்கிறார்கள். ஆனால் இதன் விளைவு, வைத்திய வரலாற்றிலேயே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திவிடக்கூடும்.

ஒரு மனிதனின் திறமை (அவனது இளமையும் முதுமையுங்கூட) அவனது ரத்தக் குழாய்களையே பொறுத்தது. இவை செயல்படாமல் நின்றுவிட்டால், இருதயமும் மற்ற உள்ளுறுப்புக்களும் பாதிக்கப்படுகின்றன. மனிதன் கடைசியாக நலிவுற்று, தீவிரநோய்க்கு உள்ளாகிறான்.

ஒரு குழந்தை பிறக்கும்போதே ஏதோ கோளாறு காரணமாக, அதன் இருதயத்தின் பிரதான நல்ல ரத்தக்குழாய் குறுகிப் போய், கடினத் தன்மை அடைந்துவிட்டால், அந்தக் குழந்தை தொடர்ந்து உயிர்வாழ்வது சந்தேகமே. ஒரு மனிதனின் உடம்பில் நோய் காரணமாகவோ அல்லது நாளடைவில் ஏற்பட்ட சிதைவுகள் காரணமாகவோ ரத்தக் குழாய்களின் விரியுந்தன்மை கெட்டுப் போனாலும், அல்லது ரத்தக்குழாய்கள் அதிகமாக விரிவடைந்து விட்டாலும், அவனது உயிருக்கு எந்தச் சமயமும் ஆபத்து நேரலாம். மனிதனின் வாழ்க்கை பெரும் அளவுக்கு ரத்தக் குழாய்களின் நிலைமையைப் பொறுத்தது. குளிர், சூடு, கடும்சிரமம், ஓய்வு, அதிர்ச்சி, தூக்கம், சேதம் ஆகியவற்றின் பலன் ரத்தக் குழாய்களில் உடனுக்குடன் தெரியும். தவிரவும், பெரிய நல்ல ரத்தக் குழாய்கள், ரத்தத்தை உடம்பின் மூலை முடக்குகளுக்கெல்லாம் செலுத்துவதில் தாங்களே நேரடியாகப் பங்குகொண்டு, இருதயத்தின் வேலைப் பளுவைக் குறைக்கின்றன.

ஆஹா, இந்த ரத்தக்குழாய்களைப் புதுப்பிப்பதற்கு ஒருவழி தெரிந்துவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! — என்று நெடுநாட்களாக எத்தனையோ வைத்தியர்கள் ஏங்கி வந்திருக்கிறார்கள்.

படிப்படியாக ரத்தக்குழாய்களைப் பழுது பார்ப்பதற்குத் தெரிந்துகொண்டார்கள். இப்போது அவர்கள் ரத்தக் குழாய்களைத் திறந்து, ரத்த ஓட்டத்துக்குத் தடையாக இருக்கும் இடைஞ்சல்களை அகற்றுவதற்கு வழிகண்டுவிட்டார்கள். பிறக்கும் போதே குறுகிப்போயிருந்த ரத்தக் குழாய்களை வெட்டிவிட்டு, மீதிப்பகுதிகளை ஒன்று சேர்த்துத் தைத்துவிடுகிறார்கள். ரத்தக் குழாய்களில் சிறுசிறு ப்ளாஸ்டிக் குழாய்களைக்கூடப் பொருத்திவைக்கும் அளவுக்கு இப்போது முன்னேறிவிட்டார்கள். ஆனால் இதுவரை இந்த முறைகளெல்லாம், ஏற்கெனவே மரணப் பாதையை அடைந்து விட்டவர்களின் உடம்பில் "அவசரகால நடவடிக்கை"களாகத்தான் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இப்போது மார்பர்க் பேராசிரியர்களின் ஆராய்ச்சியின் மூலம் ரத்தக் குழாய் ரணசிகிச்சையில் முற்றிலும் புதிய வழிகள் தோன்றியிருக்கின்றன. 45 நாய்களின் உடம்பில், பிரதான நல்ல ரத்தக் குழாய்க்கு பதில் நுண் துளையுள்ள ப்ளாஸ்டிக் குழாய்கள் பொருத்திப் பரிசோதனை செய்த விவரங்களை பேராசிரியர் பெட்ரி வெளியிட்டிருக்கிறார். 14 மாதகாலம் இவற்றைக் கவனித்துக் கொண்டு வருகையில், இந்த நாய்களின் உடம்பில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

உயிரற்ற பொருளை அடிப்படையாகக் கொண்டு, ப்ளாஸ்டிக் பொருளின் ஆதாரத்தில், சொந்தமாக செயல்படும் புதிய ரத்தக் குழாய்கள் உருவாகிவிட்டன. புதிய உயிரணுக்கள் சேர்ந்து குழாயின் உட்பகுதியில் மிருதுவான சுவர்போல அமைந்து, ரத்தம் மீண்டும் இயற்கையான நிலையில் ஓடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன. பூதக்கண்ணாடியில் பார்த்தால்கூட, இவ்வாறு உருவான உள் பூச்சுக்கும், இயற்கையான ரத்தக் குழாயின் உட்பகுதிக்குமிடையே எந்த வித வித்தியாசமும் தெரியவில்லை. பின்னர் தசையின் உயிரணுக்களும் விரிந்து சுருங்கும் தன்மையுள்ள நார்களும் உருவாகி, புதிய ரத்தக் குழாயின் அமைப்பை பூர்த்தியாக்கிவிட்டன. இவையெல்லாம் சில வாரங்களுக்குள் முடிந்துவிட்டன.

மியூனிக்கிலும், டுஸ்ஸல்டார்ப்பிலும் உள்ள ஆஸ்பத்திரிகளில், மனிதர்களின் உடம்பில் செயற்கையான ரத்தக் குழாய்கள் பொருத்தவேண்டிய அவசியம் நேர்ந்த சமயங்களில், இவ்வாறே ப்ளாஸ்டிக் குழாயின் ஆதாரத்தின்மேல், புதிய ரத்தக் குழாய்கள் உருவானதைப் பார்த்திருக்கிறார்கள்.

(Indian News Translation Bureau)

நமது தேசம்

விவரங்கள்

கிராமங்கள்	...	5,58,088
நகரங்கள்	...	3,018

10 லக்ஷம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட நகரங்கள் 5

1. Greater கல்கத்தா	...	45,78,071
2. Greater பம்பாய்	...	28,39,270
3. மதராஸ்	...	14,16,056
4. டெல்லி	...	13,84,211
5. ஹைதராபாத்	...	10,85,722

நமது ஆசிரிய சமூகம் (சென்னை ராஜ்யம்)

லோயர் கிரேடு ஆசிரியர்கள்	...	2,388
ஹையர் கிரேடு ஆசிரியர்கள்	...	65,008
செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்	...	39,320
B. T. கிரேடு ஆசிரியர்கள்	...	6,765

கல்வித் தெய்வம்

(ஆ. வேலுமணி, தலைமையாசிரியர், இளநிலை ஆதாரப்பள்ளி, காரவலசு)

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத சாதகமாய் விளங்குவது கல்வி. அந்தக் கல்வியை நாட்டின் சூழ் நிலைக்கும் பொருளாதார நிலைக்கேற்ற தாக, மாற்றியமைக்கக் கூடியது அங் குள்ளோரின் தகுதியைப் பொருத்தது.

குறிப்பாக நம் நாட்டில் கல்வி முறை பலவாறு மாற்றியமைக்கப்பட்டு, இன் றைய நிலையிலே ஆரம்பக் கல்வி, ஆதா ரக் கல்வி என்ற இரு பிரிவாக இருந்து வருகிறது.

இந்த இரு கல்வியைக் கற்பதும் ஒரு குழந்தைப் பருவந்தான். ஒரு கல்வியோ ஏட்டின் மூலம் நடைபெறும் கல்வியாக வும், மற்றொன்று தொழில் மூலம் கல்வி யாகவும் இருந்து வருகிறது. இப்படி தனித்தனியே கல்வி கற்ற மாணவர்கள், உயர்நிலைப் பள்ளிக்கு வரும்போது, ஒரு நிலைக்கு வரவேண்டியுளது.

தொழில் மூலம் கற்றவனே ஆசிரிய ரின் திறமையிலே கல்வி கற்று வளர் கிறான். ஏட்டின் மூலம் கற்பவன் ஆசிரி யரை எதிர்பார்த்து, புத்தகத்தை நம்பு கிறான். இருவரும் உயர் வகுப்பு வரும் போது, தொழில்மூலம் கற்றவன் ஆசிரி யரை எதிர் நோக்கி இருக்கிறான். ஆனால் அங்கு புத்தகமே குறிக்கோளாகவும், ஆசிரியர் துணையாக இருப்பது கண்டு திகைக்கிறான். புத்தகத்தில் கற்றவனுக்கு அம் முறை புதிதாகத் தென்படுவதில்லை. அதனால், அவன் பழைய முறைகளையே கையாளுகிறான்.

இப்போதுள்ள ஸ்டாண்டர்டு திட் டத்தை நோக்குவோமாயின், கல்வி ஆண்டு அதிகமாயும், அதிலே புத்தகத் தில் கற்பவனுக்கு சுலபமாகி, பழக்கத் திற்கு வருகிறது. ஆதாரக் கல்வி மாண வனுக்கு ஸ்டாண்டர்டு திட்டப்படி பாட முறை அமைக்க முடியுமா? என்றால் முடியாதுதான். ஏன், முடியவே முடி யாது.

ஸ்டாண்டர்டு திட்டப்படி 5-ம் வகுப்பு மாணவனுக்கு; ஆங்கிலப் பாடம், செயல் மூலம் இணையாது, புத்தகமே கைக் கொள்ள வேண்டியுளது.

ஜாதி மத வர்க்க பேதமற்ற சமுதாயம் அமைக்க குழந்தைகளுக்கு போதிக்கும் முறையிலே ஆதாரக் கல்வி சிறந்தது தான். ஈருண்டு பயிற்சி பெற்று ஒரு சமுதாயத்திற்கு சேவைக்கு வருவோரே, ஜாதி மதபேத நீதியிலிருந்து தவறிவிடு கின்றனர். அப்படியிருக்க குழந்தைகள் ஏன் அந்நீதியிலிருந்து தவறமாட்டார் கள் என்பது என்ன நிச்சயம், இதற்கு சமுதாயம் திருத்தினால் போதுமானது.

ஆதாரக் கல்வி பற்றி, ஜான் ரஸ்கின், குரோபட்கின், ரூஸோ, மாண்டிச்சோரி, டால்ஸ்டாய், காந்தி போன்ற அறிஞர் களின் கருத்துக்களை, மக்கள் புரிந்து கொள்ளுவார்களேயானால், கல்வி நெறி வளரும்.

ஆதாரக் கல்வியைப்பற்றிய நெறி முறைகளை முதலில் மக்கள்பால் பரப்ப வேண்டும். பின்னர் அந்த அடிப்படை யிலேயே, ஆரம்ப ஆதாரக் கல்வியாகவே, எல்லாப் பள்ளிகளும் இயங்கவேண்டும். இக் கல்வியானது 15 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு இருக்குமேயானால், நாடு எல்லாத் துறையிலும் பயனடையும். இதே முறையை குழந்தைக்குப் போதிக் கும் வகையிலே பொருள் சேதமும், பாது காப்பின்மையும், கல்வி வெறுப்பும் ஏற் பட்டு, தொழில் மூலம் கற்பது கண்ட ஏதுமறியாக் கிராம மக்கள், தொழிலே கல்வியென நினைந்து, அத்தொழில் இல் லங்களிலே, நடத்த எண்ணி குழந்தை களை அந்தத்தொழிலுக்கு அடிமையாக்கி விடுகின்றனர்.

இதனால்தான் நாட்டிலே கல்வி கற்றவர் தொகை அதிகப்படாமல் இருந்து வரு கிறது. ஒரு வளரும் கல்வியைப் பற்றி, முதலில் நாட்டு மக்களிடையே கருத்துப் பரிமாறி, அந்த மக்கள் உள்ளத்திலே கல்வி முறை தெய்வமாக நிலைத்து, அந்த கல்வித் தெய்வத்தை, ஆலயமென்ற பள் ளியில், பக்தனென்ற ஆசிரியருடன், சமுதாய மக்கள் தங்கள் குழந்தைகளு டன் வழிபட்டார்களாயின், அமரகவியின் "பள்ளித்தலமனைத்தும் கோயில் செய் வோம்" என்ற சொல்லுக் கொப்ப, நாட் டில் இனி கல்லாத மக்களில்லை, கல்லாத மக்களில்லை, எனத் தோள் கொட்டிப் பண் பாடும் நாள் அதிவிரைவில் வரவேண்டும்.

செய்தித் திரட்டு

E. R. ஹிந்து எலிமெண்டரி பாடசாலை, திருச்சி

இ. ரெ. இந்து எலிமெண்டரி பாடசாலையில்பதிநான்காவதுசுதந்திரதினவிழாவை மேற்படி பாடசாலை ரங்காகுருஜீயர்படையினர் 15-8-1960அன்று மிக்க சிறப்பாகக் கொண்டாடினர். விழாவிற்கு உயர்திரு T. N. ஹரிஹரன் B.A.,B.L., வழக்கறிஞர் தலைமை தாங்கி, தேசீயக் கொடியை ஏற்றுவித்தார். கொடி வணக்கத்திற்குப் பின் பள்ளி மாணவிகளால் சுதந்திர தின கீதம்பாடி கோலாட்டம் போடப்பட்டது. தலைவரையும் வந்திருந்தோரையும் பள்ளித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ S. சங்கர அய்யர் வரவேற்றார். தலைவர் குழந்தைகளுக்கு சிறு கதைகள் மூலம் இந்நாளில் நாம் செய்துகொள்ளவேண்டிய சபதம், உறுதி முதலியனபற்றி தெளிவாக எடுத்துரைத்தார். குருஜீயர் தலைவர் ஸ்ரீ T. R. சீனிவாசன் நன்றி கூறினர். திருச்சி ஜெயராம் டிரான்ஸ்போர்ட்ஸ் உரிமையாளர் திரு. C. துரைராஜ் அவர்கள் மனமுவந்து வழங்கிய மிட்டாய்கள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

இராமசாமி செட்டியார் வித்தியாசாலை, நடராஜபுரம்

இப்பள்ளியில் சுதந்திர தின விழா இன்று நடைப்பெற்றது. காலைசுமார் எட்டு மணியளவில் பள்ளி மாணவ, மாணவிகளும் ஆசிரியர்களும் ஒரு மாபெரும் ஊர்வலம் நடத்தினர். பின்பு பள்ளியில், உள்ளூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. நா. ரெத்தினம் பிள்ளை அவர்கள் மாணவ, மாணவிகளின் அணிவகுப்பைப் பார்வையிட்டு தேசீயக்கொடியை ஏற்றுவித்தார். விழாக் கூட்டம், சமுதாய வளர்ச்சித்திட்ட நூற்பு அமைப்பாளரும், தியாகியுமான திரு. R. கோபாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. பள்ளி மாணவர் இருவர் இறை வணக்கம் பாடினர். தலைமையாசிரியர் திரு. S. முத்துவீரப்பா அவர்கள் தலைவரையும் மற்றவர்களையும் வரவேற்றார். தலைவர் தொடக்கவுரைக்குப் பின் மாணவமாணவிகள் சொற்பொழிவாற்றினர். தலைமையாசிரியர் திரு. S. முத்துவீரப்பா, உதவி ஆசிரியர்கள் திரு. C. நாகராஜன், திரு. மா. மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப் பின்பு தலைமையாசிரியர் திரு. S. முத்துவீரப்பா அவர்கள் நன்றிகூற நாட்டுப் பண்ணுடன் விழா இனிது முடிவுற்றது. கடைசியாகக் குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

வட ஆற்காடு மாவட்ட தெலுங்கு ஆசிரியர்களின் மாநாடு

7-5-60ல் மாலை 3 மணிக்கு வடாற்காடு மாவட்ட தெலுங்கு ஆசிரியர்களின் மாநாடு, ஒடுகத்தூரில் (வேலூர் தாலுக்கா) முன்னுள் கௌன்சிலர் திருவாளர் J. M. கோவிந்தசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் மாவட்ட பகுதிகளிலிருந்து ஆசிரியர் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். திரு. A. கிருஷ்ணசாமி செட்டியார் அவர்கள், சங்கத்தின் நோக்கத்தைப்பற்றியும், முக்கியத்துவத்தைப் பற்றியும் விரி உரையாற்றினர். மற்றும் பல ஆசிரியர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

சங்க நிர்வாகஸ்தர்கள்

1. **தலைவர்:** திரு. N. N. புருஷோத்தம நாயுடு அவர்கள்.
2. **உபதலைவர்:** திரு. T. பக்தவத்சலம் அவர்கள்.
3. **காரியதரிசி:** திரு. P. M. குப்புசாமி செட்டி அவர்கள்.
4. **உப காரியதரிசி:** திரு. A. K. முனிசாமி செட்டி அவர்கள்.
5. **பொக்கிஷதாரர்:** திரு. N. கோவிந்தசாமி செட்டி அவர்களும் மற்றும் 9 கமிட்டி அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தீர்மானங்கள்

1. ஆசிரியர்களுக்கு, இன்ஷூரன்ஸ், பென்ஷன், இலவசக் கல்விதிட்டங்களை சலுகை செய்து தந்த அரசாங்கத்திற்கு இம் மாநாடு நன்றி செலுத்துகிறது.

2. செக்கண்டரி, ஹையர் கிரேட் ஆசிரியர்கள், இம்மாகாணத்தில், தமிழ்ப் பாடசாலைகளில் வேலைசெய்யும் தெலுங்கு ஆசிரியர்கள் S.S.L.C., E.S.L.C., முறையே, தமிழ் மொழியில் தேர்ச்சிப் பெறவேண்டுமென்ற சமீபத்தில் 22-12-59 பிறப்பித்த G. O.க்களுக்கு முந்தியுள்ள, தமிழ்ப்பாடசாலைகளில் எவ்வித குறையுமில்லாமல் வேலை செய்து வந்த எல்லா ஆசிரியர்களுக்கும் **நிரந்தர தவிர்ப்பு** கொடுத்தும், தெலுங்கு, தமிழ் என்ற பாகுபாடின்றி, சர்வீஸுக்கு ஏற்றவாறு, உயர்வும், உயர்நிலைப்பள்ளிகளில், மாற்றுதலும், கொடுக்க இம்மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

3. 40 வயதுக்கு மேற்பட்ட எல்லா கிரேட் தெலுங்கு போதனை முறை பயின்றுள்ள, தமிழ் பாடசாலைகளில் வேலை செய்துவரும் ஆசிரியர்களுக்கு, நிரந்தரமாக தமிழ் போதிக்க தவிர்ப்புத்தர வேணுமாயும், இம்மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. இது சம்பந்தமாக, தக்க கல்வி அதிகாரிகளையும், கனம் கல்வி மந்திரியையும் நேரில் கண்டு தூது சென்று, நேரில், குறைகளைச் சொல்லி குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டி ஓர் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

இன்னும் சில, பல தீர்மானங்கள், தீர்மானிக்கப்பட்டு, திரு. A. கிருஷ்ணசாமி செட்டியாரால் நன்றி செலுத்தப்பட்டு, தேசீயகீதத்துடன், இம்மாநாடு தேனீர் விருந்தளிக்கப்பட்டு, இனிது முடிந்தது.

சென்னை ஆசிரியர் சங்கம்

1959-60 வருடாந்திர அறிக்கையிலிருந்து குறிப்புகள்

13-12-1959 சென்னை நகர் ஆரம்ப ஆசிரியர் மகாநாடு நடந்ததில் 14 அம்சத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இந்த அம்சங்களில் பெரும்பாலனவைகளுக்குப் பலன் இதுவரை கிடைக்காததால், அவைகள் வற்புறுத்தப்பட்டு வருகின்றன.

வீட்டு வாடகைப் படி

இது இவ் வருஷ முக்கியமான வேலைத் திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. 5-9-1959-ல் ஒரு பொதுக்கூட்டம் போடப்பட்டது. கூட்டம் முடிந்ததும் சுமார் 1000 ஆசிரியர்கள் சர்க்கார் அலுவலகத்திற்கு ஊர் வலமாகச் சென்றனர். 2268 ஆசிரியர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பங்கள் புத்தகமாகச் செய்யப்பட்டு சர்க்காருக்கு அனுப்பப்பட்டது.

வேலை நிரந்தரம்

இது இவ்வருஷ வேலையில் மற்றொரு முக்கியமான அம்சமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. சர்க்கார் கொண்டு வரவிருக்கும் செகன்டரி கல்வி சட்டத்திலும், எலிமெண்டரி கல்விச் சட்டத்திலும் ஆசிரியர் வேலை நிரந்தரத்திற்கு வழி செய்யப்படவேண்டுமென வற்புறுத்தப்பட்டது. வரும் வருடத்தில் சட்டம் உருவாக்கப்படுமுன் மேற்கொண்டு இவ் விஷயமாய் சங்கம் வேலை செய்ய வேண்டும்.

பென்ஷன் விதிகள்

1-4-1955ல் சர்வீஸ் இல்லாத பேர்களுக்கும் எல்லா ரிடையரான ஆசிரியர்களுக்கும், பென்ஷன் கொடுக்கப்படவேண்டுமெனவும், ரிடையராகி மறுபடி உத்யோகத்திலிருப்பவர்களுக்கும் பென்ஷன் கொடுக்கப்படவேண்டுமெனவும், ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு கிராண்டு தொகையை வைத்துக் கணக்கு செய்யாமல் வாங்கிய சம்பளத்தின்பேரில் கணக்கு செய்து பென்ஷன் கொடுக்கவேண்டுமென்றும், பென்ஷனர்களுக்குக் கிராக்கிப்படி கொடுக்கப்படவேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

30-7-60-ல் உடன்குடியில் நடைபெற்ற திருச்செந்தூர் தாலுகா ஆசிரியர்கள் சங்க பொதுக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. புதிய திட்டத்தின்படி பிரிவிலேஜ் ரஜா எடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு உரிமை அற்றுப்போகிறது. நிர்வாகிகளும் புதிய ஆள் நியமனம் இல்லாதபடியால் மேற்கண்ட ரஜாவை அனுமதிப்பதில்லை. ஒன்று பழைய ஆசிரியர்களின் பதில் நியமனம் விஷயம் பழைய மாணவர் திட்டத்தை ஒத்திருக்கவேண்டும். அல்லது மற்ற அரசாங்கத்தின் ஊழியர்கள் உரிமை ரஜாக்களை சேர்த்து வைத்துக்கொள்ள விதி செய்திருப்பது போன்ற விதி அமுலாக்கப்படவேண்டுமென்று யூனியன் வேண்டுகிறது.

2. ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கான ஓர் திட்டத்தைக் கொண்டு வந்த

Regd. No. M. 3473

Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

தற்காக அரசாங்கத்திற்கு யூனியன் நன்றி செலுத்துகிறது.

3. ஓர் ஆசிரியர் ஒன்றிற்கு மேற்பட்ட (2 வகுப்புகளுக்கு) வகுப்புகளுக்குப் பாட போதனை செய்ய ஏற்பட்டால் அவ்விரு வகுப்புகளின் மாணவர் வருகை 35க்கு மேல் இருப்பினும் அவ்விரு வகுப்புகளுக் கும் வேறு ஒரு ஆசிரியரை நியமிக்க over all attendance பாதகமாக இருப்ப தால் அவ்விஷயத்திலும் ஒரு வகுப்பை இரண்டாகப் பிரிப்பதற்கு தற்போதுள்ள நடைமுறை விதியை மாற்றி மற்றுமொரு ஆசிரியரை நியமித்துக்கொள்ள யூனியன் அரசாங்கத்தை வேண்டுகிறது.

4. தற்போதுள்ள 5-ம் வகுப்பின் பாடத்தின் தரம் பழைய திட்டத்திலுள்ள 6-ம் வகுப்பிற்கும் சற்று அதிகமாகவே இருப்பதால் அவ்வகுப்பினையும் ஒரு Sec. Gr. Post ஆக நிர்ணயிக்கவேண்டுமென் றும், இந்த விதி உயர் துவக்கப் பள்ளி களிலுள்ள 5-ம் வகுப்பிற்கும், அதனி லுள்ள பிரிவுகளுக்கும், துவக்கப் பள்ளி களிலுள்ள 5-ம் வகுப்பின் பிரிவுகளுக்கும் 1-6-60 முதல் பொருந்தும்படி விதிகள் அமைக்க அரசாங்கத்தை யூனியன் வேண்டுகிறது.

5. புதிய மாணவர், ஆசிரியர் விகிதம் இல்லாத பள்ளிகளில் பிரசவ ரஜா மற் றும் ரஜாக்களுக்கும் பதிலாட்கள் போட அனுமதி தரவேண்டுமென்று யூனியன் அரசாங்கத்தைவேண்டுகிறது.

TIRUNELVELI DISTRICT

List of Office-bearers for the year 1960-61 elected at the General Body meeting held on 30-7-1960.

President:—Thiru. R. M. Ganapathi, Assistant, P. S. M. Senior Basic School, Kulasekharapatnam. P. O.

Vice-President:—Thiru. David, R. C. Elementary School, Puraiyur, (via) Kurumbur.

Secretary:—Thiru. N. Thirunavukarasu, B. A., B. T., Headmaster, Saivaprakasa Vidyasalai Senior Basic School, Udangudi, Christianagaram P. O.

Assistant Secretaries:—1. Thiru. Peter Paul, Assistant, Elkay Higher Ele. School, Kayalpatnam. P. O.

2. Thirumathi. Empress, Ibrahim Hr. Ele. School, Sattankulam, P. O.

Treasurer:—Thiru. Jesu Maria Susai, R. C. Elementary School, Puthukinathanvilai, Pitchlvilai P. O. (via) Tiruchendur, S. Ry.

Auditor:—Thiru A. Gnanasigamoni, Headmaster, T. D. T. A. Higher Elementary School, Alwarthirunagari, S. Ry.

Representatives on the Executive Committee of the District Teachers' Guild from our Union :—

1. Thiru. R. M. Ganapathi, Assistant, P. S. M. Senior Basic School, Kulasekarapatnam. P. O.

2. Thiru. Francis Packianathan, R. C. Higher Elementary School, Sattankulam. P. O.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri G. Krishnamurthi, M.L.C. & Published by Sri S. D. Krishnamurthi Rao, B. A., L. T., for the S. I. T. U., at Rajah Annamalaipuram, Madras-28.